000001
209
209
GLNO 14659

# தாயுமானவர்


சென்னை சென்ற் பீட்ஸ் ஐ ஸ்கூல்
தலைமைத் தமிழ்ப்பண்டிதர்
சே. சோமசுந்தரம் பிள்ளை
எழுதியது

SARASWATI MAHAL
RECEIVED
Date 23-1-29
TANJORE

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

சென்னை :
ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்
1926

ரிஜிஸ்தர் செய்தது] [விலை 1 அணா



000003

# தாயுமானவர்

க. கேடிலியப்பர் 209

குழந்தைகளே,

இன்றையதினம் உங்களுக்கு இனிமையான கதையொன்று சொல்லுகிறேன்; கவனமாகக் கேளுங்கள். அந்தக்கதை ஒரு பெரியவரைப் பற்றிய கதை. அந்தப்பெரியவர் பெருஞ் செல்வராக இருந்தவர். அவர் தமக்கு இருந்த செல்வத்தையெல்லாம் விட்டு நீங்கினவர். சுவாமியே பெருஞ் செல்வம் என்று நினைத்தவர். அவரையே வழிபட்டு, தம் காலத்தைக் கழித்தவர். அப்படிப்பட்ட பெரியவருடைய சரித்திரத்தை நீங்கள் அறியவேண்டியது அவசியம். ஆதலால் சிரத்தையுடன் கேட்பீர்களாக:

நீர்வளத்திலும் நிலவளத்திலுஞ்சிறப்புப்பெற்றது தஞ்சாவூர் ஜில்லா. அந்தத் தஞ்சாவூர் ஜில்லாவில் வேதாரணியம் என்னும் ஊர் ஒன்றுண்டு. அந்த ஊர் பலவருஷங்களுக்கு முன்னே காடாக இருந்ததாம். இப்பொழுது ஊராகவிருக்கும் வேதாரணியத்தில் இருக்கும் தேவாலயம், காடாக இருந்தகாலத்தும் இருந்ததாம். அப்பொழுது, அந்தக் காட்டை விரும்பிய சிவலிங்கத்தினை வேதங்கள் பூசைசெய்தனவாம். அதனால் அக்காட்டிற்கு வேதாரணியம் என்னும் பெயர் அமைந்ததாம்.

இப்படிச் சிறப்பித்துச் சொல்லப்படும் வேதாரணியத்திலே, சைவவேளாளர் குலத்திலே, இருநூறு வருடங்களுக்குமுன் கேடிலியப்பபிள்ளை என்பவர் ஒருவர் இருந்தார்.

அவர் கடவுளிடத்தில் அன்பு பூண்டவர். அடியார்களிடத்தில் பக்தியுடையவர். ஏழைகளிடத்தில் பிரியமுடையவர். கல்வி கேள்விகளில் பெருமையுற்றவர். நல்லொழுக்கத்தில் தமக்கு நிகர் இல்லாதவர். அவர் திருக்கோயில் காரியங்களை ஒழுங்காக நடத்திவர விருப்பங்கொண்டு, அவ்வூர்த்தேவாலய விசாரணைத் தொழிலை மேற்கொண்டிருந்தார்.

இப்படியிருக்குங் காலத்தில், வேதாரணியத்திலிருந்த சைவவேளாளரொருவர், கேடிலியப்பபிள்ளையின் நல்லொழுக்கங்களையும் நற்குணங்களையும் கேள்வியுற்று மகிழ்ந்து, தமது அருமை மகளாகிய கஜவல்லியம்மையை அவருக்கு மணஞ்செய்து கொடுத்தனர்.

சிலகாலத்திற்குப்பிறகு, இந்த இருவருக்கும் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்குச் "சிவ சிதம்பரம்" என்று பெயரிட்டனர். அக்குழந்தை வளர்ந்து வருகையில், கேடிலியப்பரின் தமையனார் அவரிடம் வந்து தமக்கு மகப்பேறு இல்லாதகுறையைச் சொல்லித் துக்கித்தார். தமையனார் துக்கித்தலைப் பார்க்க மனம் கொள்ளாமல், கேடிலியப்பர் தமது ஏகபுத்திரனாகிய சிவ சிதம்பரத்தைச் சுவீகாரஞ்செய்து கொள்ளும்படி அவருக்குக் கொடுத்தார். கேடிலியப்பரின் தமையனார், அக்குழந்தையை அழைத்துக் கொண்டுபோய்ச் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்து, சுவீகாரபுத்திரனாக ஆக்கிக்கொண்டார்.

## உ. திரு அவதாரம்

நமது கேடிலியப்பர் வேதாரணியத்துத் தேவாலயத்தின் விசாரணைத் தலைவராக இருந்த காலத்தில், திருமலை நாயகரின் பேரனுரான விஜயரங்க சொக்கநாத நாயகர் விஜயபுரத்தோடு திரிசிராப்பள்ளியையும் ஆண்டுவந்தார். அவர் அரசாட்சி செய்தகாலம் 1704 கி-பி. முதல் 1731 கி-பி. வரையில் என்று சரித்திர நூலில் தேர்ந்தவர்கள் சொல்லுகிறார்கள்.

அந்த அரசர், கேடிலியப்பரின் நற்குணங்களைப் பற்றியும், நல்லொழுக்கங்களைப் பற்றியும், கல்விகேள்வியைப்பற்றியும், தேவாலய விசாரணை ஒழுங்கைப்பற்றியும் அடிக்கடி கேள்வியுற்றுக்கொண்டே யிருந்தபடியால், அவரை ஒருநாள் தருவித்து, அவருக்கு மந்திரிவேலையைக் கொடுத்தார்.

அதனை ஏற்றுக்கொண்டு கேடிலியப்பர், தம் பேருக்கு (கேடு+இலி+அப்பர்) ஏற்ப ஒருவருக்கும் கேடுபுரியாது தம் வேலையைச் செவ்வையாக நடத்திவந்தார்.

இந்தக் கேடிலியப்பருக்குக் குறையொன்றிருந்தது. அது இன்னகுறையென்று சொல்லுங்கள் பார்ப்போம். தாம் படிக்கவேண்டும் என்னும் குறை அவருக்குக் கிடையாது; அவருக்குக் கல்விஞானம் அதிகமுண்டு. அவர் மந்திரி வேலை பார்த்து வருவதால் செல்வம் இல்லையே என்னும் ஏக்கமும் கிடையாது. பின் அவருக்கிருந்த குறைதான் யாது என்று கேட்பின், பிள்ளையில்லாக் குறையே. தமக்கிருந்த ஏகபுத்திரனைத் தம் தமையனுருக்குக் கொடுத்து விட்டார் என்று முன்பு சொல்லவில்லையா? அப்படிச் சிவ

சிதம்பரத்தைக் கொடுத்த பின்னர்க் கேடிலியப்பருக்குப் பிள்ளை பிறக்கவில்லை. அதனால் அவர் திரிசிராப்பள்ளியிலுள்ள தாயுமானவர் சந்நிதிக்குச் சென்று, “எம்பெருமானே, யான் யாருக்கு என்னகுறையை உண்டு பண்ணினேனோ; எனக்கு நீ இந்தக்குறையை உண்டு பண்ணியிருக்கிறாய்! என்னை அறியாது ஏதேனும் தீங்கு புரிந்திருந்தபோதிலும் என்னை மன்னித்து என் குறையைத் தீர்க்கும்படி வேண்டுகிறேன்,” என்று வேண்டினார். வேண்டுவார்க்கு வேண்டியதை அளிக்கும் எம்பெருமான், அவர் குறையைத் தீர்க்கவும், சைவப்பயிரை வளர்க்கவும் மனம்வைத்தார். உடனே ஓர் ஆண்குழந்தை அவதரித்தது.

## ௩. மந்திரி வேலை

தாயும் ஆனவர் கிருபையால் அக்குழந்தை தோன்றியபடியினாலே, அந்த மகவுக்குத் தாயும் ஆனவர் என்று பெயரிட்டனர். குழந்தையாகிய தாயுமானவர் நாளேற நாளேற, தாய்ப் பாலோடு ஞானப் பாலையும் பருகினாற்போல ஞானப்பொலிவுடன் விளங்கி வந்தார். எம்பெருமானை மறவாதிருந்தார். அவர் தந்தையார், தாம் செய்ய வேண்டிய கடமைப்படி, தக்க பருவத்தில் வித்தியாரம்பஞ் செய்து, கற்பிக்க வேண்டிய நூல்களைக் கற்பித்தார். சிறிது காலத்திற்குள் தமிழிலக்கிய இலக்கணங்களில் தேர்ந்ததுமன்றி வடமொழியிலுள்ள பல நூல்களையுங் கற்றுத் தேர்ச்சி பெற்றனர். இருமொழியிலுமுள்ள இலக்கிய இலக்கண நூல்களைக் கற்று வல்லவரான பிறகு, எம்பெருமான் திருவடிக்கு அன்பு செய்யும்

000007



விதம் இன்னதென அறிவிக்கும் ஞான நூல்களை வாசிப்பதே பெருந் தொழிலாகக் கொண்டிருந்தனர்.

"எல்லார்க்கும் பரம பிதாவாகிய பரமசிவத்தை என்று காண்பேன், என்று காண்பேன்" என்னும் பேரவாவுடன் தம் பதினாறும் ஆண்டில் நூல்களைக் கற்று வருகையில், தாயுமானவரின் பிதாவாகிய கேடிலியப்பர் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்.

கேடிலியப்பர் பிரிந்ததும் நம் தாயுமானவர் பெருஞ்செல்வத்திற்கு அதிபரானார். இளமைப் பருவத்தில் அதிபராகியும் அச்செல்வத்தை அவர் மதிக்கவில்லை. நல்ல உடைகளை உடுத்துவதிற் பிரியங்கொள்ளவில்லை. வாகனங்களேறுவதில் ஆசை கொள்ளவில்லை. கஸ்தூரி, சந்தனம், புனுகு முதலிய வாசனைத் திரவியங்களைப் பூசிக்கொள்வதில் மனம் வைக்கவில்லை. இவைகளில் ஆசை வைப்பது அறிவுடைமைக்கு அழகன்று என்றும், எம்பெருமான் திருவடிக்கு அன்பு செய்வதே அறிவுடைமைக்கு அழகு என்றும் அத்திருவடியே தம்முடைய பெருஞ் செல்வமென்றும் உறுதியாகக் கொண்டிருந்தார். முதியவர்களுக்கும் கிடைத்தற்கரிய அந்தத் தெய்வ பக்தி இந்த இளையவருக்கு அமைந்தது பெருவியப்பன்றோ?

இப்படி நம் தாயுமானவர் இறைவன் திருவடிகளை எண்ணி எண்ணி ஏக்குற்றிருக்கையில், விஜயரங்க சொக்கலிங்க நாயகர், அவரைத்தருவித்து, "நீர் நுந் தந்தையார் பார்த்து வந்த மந்திரித் தொழிலைப் பார்த்துவாரும்," என்று கூறினார். அந்த அரசர், நம் தாயுமானவர் கல்வி கேள்விகளில் மேம்பட்டவர் என்பதையும் நல்லொழுக்கத்தில் சிறப்புற்றவரென்

பதையும் நன்கறிவார். அதனல் கேடிலியப்பர் இறந்ததும் அவர் பார்த்துவந்த உத்தியோகத்தினை அவர் மைந்தருக்குக் கொடுத்தார். அவர் நல்லொழுக்க மில்லாதவராயும் கல்வி யுடையரல்லராயும் இருந்திருப்பாராஞல் அவருக்கு அவ்வளவு பெரிய உத்தியோகத்தினையுங் கொடுப்பரோ?

## ச. குரு தரிசனம்

நம் தாயுமானவர் அரசரால் கொடுக்கப்பட்ட பெரிய உத்தியோகத்தினை ஒப்புக்கொண்டு, தம் தந்தையாரைப்போலவே அதனை ஒழுங்காகச்செய்து வந்தார். இராஜகாரியங்களில் அவர்மனம் எவ்வளவுக்கெவ்வளவு பதிந்திருந்ததோ அவ்வளவுக்கவ்வளவு சுவாமி காரியத்திலும் பதிந்திருந்தது. அது, ஒரு கழைக்கூத்தன் (தொம்பரவன்) வயிற்றின் கொடுமைக்காக, ஜனங்களுடைய அன்பைப்பெற, ஓர் உயரமான மூங்கிலின்மீது இருந்து தனக்குத் தெரிந்த வித்தைகளையெல்லாம் காட்டி நடித்த போதிலும் அவன் மனம் மாத்திரம் தன் உயிரினைக் காத்துக் கொள்வதிலேயே பதிந்திருப்பதை ஒக்கும்.

அவர் ஒவ்வொரு நிமிஷமும், "இறைவனுடைய திருவடிக்கு அன்புசெய்யும் வழியைப் போதிக்கும் ஆசிரியரைப் பார்க்கும் பாக்கியமும் எனக்குக் கிட்டுமோ!" என்று சொல்லி விசனப்பட்டுக்கொண்டிருந்தார்.

இந்த ஏக்கத்துடன் இருக்கும் நாளில் ஒரு நாள், அவர் திரிசிரபுரத்தில் கோயில் கொண்டிருக்கும் தாயுமானேசுரரைத் தரிசிக்கச் சென்றனர். தரிசனத்தின்

பொருட்டுச் சென்ற மந்திரியார் அங்குச் சுவாமி தரிசனத்தின்பொருட்டு வந்திருந்த மௌனகுரு சுவாமிகளைக் கண்டனர். கண்டதும் அவர் மனம் சுவாமிகளிடத்திற் பதிந்தது; அவரை மெய்க்குரு எனக் கருதியது. அதனால் அவரை முறைப்படி வணங்கி, "சுவாமி, தங்கள் திருக் கரத்திருக்கும் புத்தகம் யாது?" என்று கேட்டனர். "துறவிக்கு வேந்தன் துரும்பு" என்னும் பழமொழிப்படி மெய்த்துறவியாக விருக்கும் மௌன சுவாமிகள் இவரைப் பொருட்படுத்திப் பதில் சொல்லாது சென்றனர்.

மௌனகுரு பதில் சொல்லாமற் சென்றால் நமது தாயுமானவர் அவரை விட்டு விடுவரோ? அவர் ஞானாசிரியருக்காக ஏங்கி யிருப்பவ ராயிற்றே. அதனால் அவர் அவரை விடாது பின் தொடர்ந்தனர். நடுச் சாமமாகி ஊரடங்கியதும் மௌனகுரு சுவாமிகள் தாயுமானேசுரர் கோயிலின் ஒரு புறத்தில் உட்கார்ந்தார். உட்கார்ந்ததும் நமது மந்திரித் தாயுமானவர் அவர் எதிரில் கை கட்டி வாய் புதைத்து நின்றனர். அப்போது மௌன சுவாமிகள் அவர்மீது கருணை கொண்டு, "என் கையில் உள்ளது சிவஞான சித்தி என்னும் ஞான நூல்" என்றனர்.

என்னலும் தாயுமானவர், "சுவாமி, சிவம் என்பது எது? ஞானம் என்பது யாது? சித்தியாவது யாது? எனக்கு விளங்க உரைக்கவேண்டும்," என்று வேண்டினர்.

வேண்டலும் அம் மூர்த்தி (சிவம் என்பது தான் எல்லோருக்கும் பதியாக விருப்பது; அப்பதியை அறியும் அறிவைத்தான் ஞானம் என்று

பெரியோர் சொல்லுகிறார்கள் ; சித்தி என்பது அந்த அறிவைக் கைவரச் செய்வது) எனத் தக்கபடி பதில் கூறினார்.

## ரு. குரு மொழி

தாயுமானவர் தமக்குள்ள ஐயங்களை யெல்லாம் சுவாமிகளைக் கேட்டு, நீக்கிக்கொண்டார். அதன் பின் கடவுளுடைய திருவடிகளை அடைதற்குரிய வழியினைப் போதிக்கும்படி வேண்டினார். அப்போது அம்மூர்த்திகள், "அன்ப, சிலகாலம் இல்லறத்திலிரு ; உனக்கு ஓர் ஆண் குழந்தை பிறக்கும். அதன் பின் யாம் வந்து, உமக்குப் போதிக்க வேண்டியதைப் போதிப்போம்," என்று சொல்லிப் பிரிய எழுந்தனர். ஆசிரியர் தம்மை விட்டுப் பிரிய எழுவதை அறிந்த தாயுமானவர், தாயை விட்டுப் பிரியுங் கன்றைப்போலக் கதறி அழுதார். அவ்வழுகையைக் கண்ட மூர்த்திகள் பற்பல பொருளுக்கு இடந் தரும் "சும்மா இரு" என்னும் இரண்டு மணிபோன்ற சொற்களைச் சொல்லிச் சென்றார்.

அவர் சென்றதும் தாயுமானவர் "சும்மா விரு" என்னும் இரு மொழியைப்பற்றிச் சிந்தித்தவண்ணமாக விருந்தார். அவ்வார்த்தைகளும் அவ்வார்த்தைகளை யுரைத்த ஆசிரியரின் திருவுருவமும் நம் மந்திரியாரின் மனத்தைவிட்டு அகலவே இல்லை.

## சு. அரசன் அறிதல்

மந்திரியார் இப்படி ஞானக்கடலில் மூழ்கி யிருப்பதை அரசர் கேள்வியுற்று, மகிழ்ச்சியடைந்து, அவரிடஞ்சென்று, "சுவாமி, தேவரீருடைய பெருமையை யறியாது தங்களுக்கு மந்திரித்தொழிலைக் கொடுத்த

மைக்காக என்னை மன்னிக்கவேண்டும். தங்களுக்குக் குற்றேவல் செய்தற்கும் தகுதியில்லாதவனாகிய யான் தங்களுக்கு இத்தொழிலைக் கொடுத்து, கடவுளிடத்தில் பதியவேண்டிய தங்கள் மனத்தினை உலகோரிடத்தில் பதியும்படி செய்த பெருந்தவறினைப் பொறுத்தருள்வதோடு தேவரீருக்குப் பணிவிடை செய்யும் பாக்கியத்தையும் எனக்கு அருளவேண்டும்,'' என்று இரந்து, அதுமுதல் அவர்மனம் களிக்கும்படி நடந்து வந்தார்.

விஜயரங்க சொக்கலிங்க நாயகர் வேண்டாமென்று தடுத்தும் நம் தாயுமானவர் வழக்கப்படி மந்திரி வேலையைப் பார்த்து வந்தார். இப்படிச் சில காலஞ் செல்லவும் விஜயரங்க சொக்கலிங்க நாயகர் இம்மண்ணுலகை வெறுத்து விண்ணுலகிற்குச் சென்றனர்.

## எ. மீனாக்ஷியம்மையின் வேண்டுகோள்

அரசன் இறந்தபின்னர், அவன் ஆண்டுவந்த நாட்டை அவன் மனைவியாகிய மீனாக்ஷியம்மை ஆளவேண்டியவள் ஆனாள். அவள் அரசுரிமைத் தொழிலை ஏற்றுக்கொண்டதும் இராஜாங்க விஷயத்தைப்பற்றிக் கலந்து பேசுதற்காகத் தன் மந்திரியாகிய தாயுமானவருக்குச் சொல்லி யனுப்பினாள். அவர் அக் கட்டளையின்படி போய் அவளைப் பார்த்தார். அவள் சில நிமிஷம் வரையில் இராஜாங்க விஷயத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்து, பிறகு அவரைப்பார்த்துத் தன்னையும் தன் அரசையும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினாள். அதாவது தன்னைக் கலியாணஞ்செய்துகொண்டு தன்னூருக்கு அரசனாக இருக்கும்படி வேண்டினாள்.

வேண்டலும், சுவாமிகள் சிறிது நேரம் தமக்குள் அவள் பேதமைக்காகத் துக்கித்தார். சிறந்த அரசனுடைய மனைவியாக விருந்தும் நல்லகுலத்தில் பிறந்தவளாகவிருந்தும் பல நூல்களைக் கற்றவளாக விருந்தும் புருஷன் இறந்ததை நினைத்துத் துக்கியாமலும் நீங்காத இன்பத்தைத் தரும் எம் எம்பெருமான் திருவடிக்குத் தொண்டு செய்ய விரும்பாமலும், ஒருவனுக்கு மனைவியாக இருந்தவள் மற்றொருவனுக்கு மனைவியாகும் வழக்கம் நந் தமிழ்நாட்டு வழக்கம் அன்றென்பதைக் கருதாமலும் நம்மை மணக்க விரும்புகின்றனளே.; இவள் எப்பொழுது கரையேறுவாள் என்று வருத்தப்பட்டார். ஆயினும் அதைப் புறத்தில் காட்டாமல், "அப்படியே ஆகட்டும்," என்று அந்த வேளைக்கேற்பப் பதிலுரைத்து விட்டு, வெளியே வந்து, அவள் நாட்டில் இருப்பதே தவறு என நினைத்து, இராமநாதபுரத் தருகிலுள்ள தேவை நகரிற்சென்று வசித்துவந்தார்.

## அ. இல் வாாழ்க்கை

இச்செய்தியைத் தாயுமானவரின் தமையனாரான சிவ சிதம்பரம் பிள்ளையும், அவர் சிறியதாயார் குமாரரான அருளையப் பிள்ளையும் கேள்வியுற்றுத் தேவைக்குச்சென்று சுவாமியைக்கண்டு விசாரித்தனர். சுவாமிகள் தாம் ஊரைவிட்டு விலக நேர்ந்த காரணத்தை ஒருவாறு குறிப்பித்தனர். அதன்பின் சிவசிதம்பரம் பிள்ளை, தம்முடன் வந்து, தம் குலம் விளங்க ஒரு பெண்ணைக் கலியாணஞ் செய்துகொண்டு சில காலம் இல்லற தருமத்தை நடத்தவேண்டும் என்று வேண்டினார்.

தாயுமானவர்க்கோ அவ்விதப் பற்றுச் சிறிதும் இல்லாதிருந்தும், முன்னர்க் குரு இட்டிருந்த கட்டளையை மறுக்க அஞ்சியும், தமையனார் சொல்லைத் தடுக்கப் பயந்தும் தமையனார் வேண்டுகோட் கிணங்கி அவருடன் சென்று விவாகஞ் செய்துகொண்டு தம் மனைவியுடன் இல்லறம் நடத்தி வந்தார்.

தாயுமானவர் இல்லறம் நடத்தி வருகையில் சிவபெருமான் திருவருளால் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்குப் பெரியோர்கள் கனக சபாபதி என்று பெயரிட்டனர்.

"சமுசார பந்தத்தினின்றும் விடுபட வேண்டும்" என்று தாயுமானவர் வேண்டுதலுக்கு இறைவன் செவி கொடுத்ததனைப்போலும், அவர் மனைவியார் குழந்தையைப் பெற்று எடுத்ததும் தங் கணவரையும் அக்குழந்தையையும் இவ்வுலகை விட்டுத் துறந்தார். [பிறகு சுவாமிகள் மறுவிவாகம் செய்து கொண்டதாகச் சிலர் கூறுவார்கள். அதற்கு ஆதாரமில்லை.]

கூ. துறவு

சுவாமிகள் மனைவியை யிழந்து தனித்திருக்குஞ் சமயத்தில் மௌனகுரு சுவாமிகள் மீட்டும் அவரிடம் வந்தார். வந்தவர் சுவாமிகளுக்கு இறைவன் திருவடியிடத்து அன்பு கெடா திருத்தலைக் கண்டார். கண்டதும் தாம் யோக முறையை உபதேசிக்கலாமென்று தீர்மானித்து, சுவாமிகளை அருகழைத்து, தாம் உபதேசிக்க எண்ணியதை உபதேசித்துத் துறவு பூணும்படி கட்டளையிட்டார். சுவாமிகள் தம் ஆசிரியர்

கட்டளைப்படி வீட்டை விட்டுக் கௌபீனதாரியாய் வெளியே சென்று, தனிமையான இடத்தில் யோகத்தில் அமர்ந்திருந்தார்.

## ய. திருப்பாடல்

நமது சுவாமிகள் யோகத்திலிருந்து எழுந்து சஞ்சரிக்கும் காலங்களில், இவ்வுலகினர் அஞ்ஞான விருளினின்றும் நீங்கவேண்டும் என்னும் பெருங் கருணையால், தேனினும் இனிய பாடல்களைத் திருவாய் மலர்ந்தருளினர். இவர் பாடிய ஒவ்வொரு பாட்டும் மிக அற்புதமாக விருக்கும். இவருக்கு அடியார்களிடத்தில் பக்தி யதிகம். இவர் அடியார்களைத் துதிக்கும் விதம் மிகவும் பாராட்டத்தக்கதாக விருக்கும். இவர் பாடல்களை அறியாத தமிழர் ஒருவருமிலர். அப்பாடல்களை நம் இந்தியாவிலுள்ளாரும், இலங்கை, சிங்கப்பூர், இரங்கூன் முதலிய இடங்களில் உள்ளாரும் கொண்டாடுகின்றனர். இவர் பாடல்களைச் சங்கீத விற்பன்னர்கள் சங்கீத சபையில் பாடாமல் இருப்பதில்லை. சங்கீத விற்பன்னர் அப் பாடல்களை முறைப்படி பாடுவாராயின் நம் கண்கள் ஆனந்தத்தால் நீரைச் சொரியாமலிரா. அவர் அழுது அழுது பாடிய அன்பராதலின் அவர் பாடல்கள் நம்மனத்தையுருக்கிக் கண்ணீரைப் பெருக்குகின்றன. நமது சுவாமிகள், அவ்வப்போது பாடிய பாடல்களையெல்லாம் அவர் மாணவராகிய அருளையப் பிள்ளையவர்கள் நம் நாட்டாருக்கு உதவும்படி எழுதி வைத்தார்கள். நமக்காகச் சுவாமிகள் செய்த பாடல்கள் 1453. இப் பாடல்கள் 1836-ல் நமது சென்னையில் அச்சிடப் பட்டன.

## ௧௧. சமாதி

உலகினர் உய்யவேண்டும், நல்வழியை நாட வேண்டும், தீய வழியை விட்டு விலக வேண்டும் என்னும் பெருங்கருணையால் நல்லாரையும் நல்லா ரல்லாரையும் நோக்கிப் பற்பல பாடல்களை அருளிச்செய்து விட்டு, இராமநாதபுரத்தில் கி. பி. 1742-ல் நித்திய செல்வத்தை அனுபவிக்கச் சமாதியில் இறங்கினார். அச்சமயத்தில் அருளையர் என்பவர் இவர்மீது அகவலொன்று பாடினார்.

## ௧௨. முடிவு

பெருஞ்செல்வத்தையும் பெருவாழ்வையும் உடையராயிருந்தும் நமது தாயுமானவர், அவற்றில் தம்மனத்தைப் பதிய விடாமல் இறைவனுக்கும் அடியாருக்கும் பக்திசெய்தலில் பதியவிட்டனரென்பதை அவர் சரித்திரத்தைப் படித்தறியும் நாம் அறிகின்றோம். ஆதலால் நாமும் நம்மனத்தினை ஒருவாறு பண்படுத்திக்கொண்டு எம்பெருமானிடத்தும் எம்பெருமான் அடியாரிடத்தும் பக்தி செலுத்தத் தொடங்குவோமாக.

> "அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி
> விட்டு விட்டால்,
> இன்பநிலை தானேவந் தெய்தும்
> பராபரமே."

பராபரக்கண்ணி—155.

E-000001

# உள்ளுறை


| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| க. | கேடிலியப்பர் | 3 |
| உ. | தாயுமானவர் திரு அவதாரம் | 4 |
| ௩. | மந்திரிவேலை | 6 |
| ௪. | குரு தரிசனம் | 8 |
| ௫. | குரு மொழி | 10 |
| ௬. | அரசன் அறிதல் | ,, |
| ௭. | மீனாக்ஷியம்மையின் வேண்டுகோள் | 11 |
| ௮. | இல்வாழ்க்கை | 12 |
| ௯. | துறவு | 13 |
| ௰. | திருப்பாடல் | 14 |
| ௰க. | சமாதி | 15 |
| கஉ | முடிவு | ,, |


Printed at the Cxaton Press, Madras --1926 (B).